**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 3/2025**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குமார் | தொழில் | : | ஆட்டோ டிரைவர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.2 முருகன் எனது பக்கத்து வீட்டுக்காரர். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் இந்த சம்பவத்திற்கு முதல் நாள் எனது மகனுக்கு மொட்டை போடுவதற்காக பொருட்களை வாங்க வெளியே சென்று விட்டு, இரவு 11.00 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். முருகன் என்பவரை யாரோ வெட்டி விட்டு போய்விட்டதாக சொன்னார்கள். போலீசார் வந்து விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 08.05.2024ம் தேதி, இரவு 09.00 மணிக்கு எதிரி முருகன் வீட்டிற்கு வந்து, முருகனை வழிமறித்து அசிங்கமாக பேசி கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரிவாளால் முருகனை மாறி, மாறி வெட்டினார் என்றால் சரியல்ல.

சம்பவத்தை பார்த்து நானும், முருகன் குடும்பத்தாரும் தடுக்க போனபோது, எதிரி முருகன் மனைவி முத்துமாரியை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக பேசி, கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. முருகனை நாங்கள் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:09:51 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 3/2025**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலுச்சாமி | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். 2024ம் வருடம் ஒருநாள் சங்கரன்கோவில் மருத்துவமனையில் எனது மைத்துனர் முருகன் என்பவரை பார்ப்பதற்காக சென்றிருந்தேன். எதிரி எனது மைத்துனர் முருகனை வெட்டியதாக கேள்விபட்டு பார்க்க போனேன். அங்கு வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அத்தாட்சிகளி உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 13.05.2024ம் தேதி, மதியம் 03.00 மணிக்கு சங்கரன்கோவில் – சுரண்டை ரோட்டில் உள்ள ஒயின்ஷாப் அருகில் வைத்து எதிரி செந்தில்குமார் என்பவரை என் முன்பும், குருசாமி முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பாட்டத்தூர் சின்னக்குளம் கண்மாய்கரையில் உள்ள வேலிமரச்செடிக்குள் இருந்த அரிவாளையும், சங்கரன்கோவில் – சுரண்டை ரோட்டில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு தென்புறமுள்ள ஓடையில் போட்டு மறைத்து வைத்திருக்கும் மற்றொரு அரிவாளையும் நான் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 03.00 மணிக்குசங்கரன்கோவில் – சுரண்டை ரோட்டில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு தென்புறமுள்ள ஓடையில் போட்டு மறைத்து வைத்திருக்கும் ஒரு அரிவாளையும், அன்றைய தினம் 03.20 மணிக்கு பாட்டத்தூர் சின்னக்குளம் கண்மாய்கரையில் உள்ள வேலிமரச்செடிக்குள் இருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், குருசாமி என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 3/2025**</u>

<u>**வழக்கு சாட்சி PW-8**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | சைக்கிள் கடை |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் சைக்கிள் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு எதிரி செந்தில்குமாரின் அம்மா எனது வீட்டிற்கு அருகில் குடியிருந்து வந்தார். அவரை விசாரிப்பதற்காக வந்த போலீசார் என்னை விசாரித்து விட்டு கையொப்பம் பெற்றார்கள். என்னுடைய வீடு மற்றும் கடைக்கு அருகே வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் மட்டும் **அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 13.05.2024ம் தேதி, மதியம் 03.00 மணிக்கு சங்கரன்கோவில் – சுரண்டை ரோட்டில் உள்ள ஒயின்ஷாப் அருகில் வைத்து எதிரி செந்தில்குமார் என்பவரை என் முன்பும், சண்முகராஜ் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பாட்டத்தூர் சின்னக்குளம் கண்மாய்கரையில் உள்ள வேலிமரச்செடிக்குள் இருந்த அரிவாளையும், சங்கரன்கோவில் – சுரண்டை ரோட்டில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு தென்புறமுள்ள ஓடையில் போட்டு மறைத்து வைத்திருக்கும் மற்றொரு அரிவாளையும் நான் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 03.00 மணிக்குசங்கரன்கோவில் – சுரண்டை ரோட்டில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு தென்புறமுள்ள ஓடையில் போட்டு மறைத்து வைத்திருக்கும் ஒரு அரிவாளையும், அன்றைய தினம் 03.20 மணிக்கு பாட்டத்தூர் சின்னக்குளம் கண்மாய்கரையில் உள்ள வேலிமரச்செடிக்குள் இருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், சண்முகராஜ் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:10:25 +0530